Registered as a NewsPaper

பக்கங்கள் - iv

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி
தொழில் நுட்பத்தில் ஒருமணி
நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள
பொற்காலம் வண்ணக் கலையகம்
MILLENNIUM COLOUR LAB
Video, Audio & Studio
மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்,
கணினி முறை வீடியோ மிக்சிங்,
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்,
அனைத்திற்கும் பொற்காலம்
வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.
R.V
பந்தல் சேவை,
(சி-8689) தர்மபுரம்.

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி-01எ | 13-02-2004 | வெள்ளிக்கிழமை | ஓசை 360

# சுவிஸ் பா.உ.கள் உட்பட 15 பேர் கொண்ட குழு

# புலிகள் உட்பட பல தரப்பினருடனும் சந்திப்பு

## மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் இன்றைய அரசியல் சூழ்நிலை குறித்து கேட்டறிந்தது

(அலுவலக செய்தியாளர்)

**சுவிற்சர்லாந்து நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 15 பேர் கொண்ட குழுவினர் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் உட்பட பல தரப்பினரையும் சந்தித்து இன்றைய அரசியல் சூழ்நிலை, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கேட்டறிந்துள்ளனர்.**

நேற்றுக் காலை தரை வழிப் பாதையூடாக கிளிநொச்சியை வந்தடைந்த இக்குழுவினர் கிளி. அரச செயலகத்துக்குச் சென்று கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் வேதநாயகன் உள்ளிட்ட குழுவினரைச் சந்தித்து இங்குள்ள மக்களின் வாழ்க்கை நிலவரம் குறித்தும், அபிவிருத்திப் பணிகளின் நிலை குறித்தும் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படுகின்ற உதவிகள் அவர்களின் நிலைப்பாடுகள் பற்றியும் இங்கு நிலவுகின்ற முக்கிய பிரச்சினைகள் பற்றியும் கேட்டறிந்தனர்.

இவர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த மேலதிக அரச அதிபர் வேதநாயகன் இடம்பெயர்ந்த மக்கள் குடியிருப்பு வசதியின்மையால் பலத்த சிரமங்களை எதிர்கொள்கின்றனர். அந்த வகையில் அவர்களுக்கான வீடுகளை

(IVஆம் பக்கம் பார்க்க)



சுவிஸ் பாராளுமன்ற உறுப்பினர் குழு மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் உள்ளிட்ட குழுவைச் சந்தித்தது.

# மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யாதிருப்பது மோசமான நிலைக்கே வழிவகுக்கும்

## சுவிஸ் பிரதிநிதிகளுக்கு த.பு.க. திட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

(அலுவலகசெய்தியாளர்)

மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கான சரியான கட்டமைப்பு இல்லை என்ற காரணத்துக்காக மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யாது விட்டால் அது மிகவும் மோசமான நிலைக்கே வழிசமைக்கும் என சுவிஸ்லாந்து நாட்டுப் பிரதிநிதிகளுக்கு தாம் விளக்கமளித்திருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், போரின் தாக்கங்களால் மிகவும் மோசமாக பாதித்துள்ள இந்த மக்களுக்கான உதவிகளை மேற்கொள்வதற்காக உள்ளூரில் உள்ள அரச,அரசார்பற்ற கூட்டமைப்புக்கள் திணைக்களங்கள் என்பவற்றை இணைத்து மக்களுக்கான பயன்மிக்க வேலைத்திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த வகையில் மக்களின் மீள் குடியேற்றம் புனரமைப்பு, சமூக பொருளாதார கட்டுமான வேலைத்

(IVஆம் பக்கம் பார்க்க)

# கிளி.தொகுதிவாக்காளர்களை தொகுதிக்குள் வாக்களிக்க ஒழுங்கு

## த.வி.கூ யினர் தேர்தல் அதிகாரியிடம் கோரல்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி தேர்தல் தொகுதியில் உள்ள வாக்காளர்கள் தமது தொகுதிக்குள்ளேயே வாக்களிக்க சாத்தியமான ஏற்பாடுகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் யாழ் தேர்தல் தெரிவத்தாட்சி உத்தியோகஸ்தரான அரச அதிபர் செ. பத்மநாதனிடம் வேண்டுகை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி தொகுதிக்கென முகமாலைப்பகுதியில் இராணுவக் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் கொத்தணி வாக்குச்சாவடியைத் திறப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. எனினும் சுமார் 57,000 க்கு மேற்பட்ட வாக்காளர்கள் இக்கொத்தணி வாக்குச்சாவடிக்குச் சென்று குறிப்பிட்ட நேரத்திற்குள் வாக்களிப்பதென்பது சாத்தியமற்றதொன்று என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(IVஆம் பக்கம் பார்க்க)

# சிறி. பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டில் வடமராட்சியில் 2 இளைஞர்கள் காயம்

வடமராட்சியின் வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இளைஞர்கள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினமிரவு மணற்காடு பகுதியில் இருந்து 'கன்ரர்' ரக டிரக்வண்டியொன்றில் மணலை இவர்கள் ஏற்றிவந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. எனினும் வல்லிபுரக்குறிச்சிப் பகுதியில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பருத்தித்துறைப் பொலிசார் குறித்த வாகனத்தை வழிமறித்துள்ளனர்.

அவ்வேளையில் வாகனத்தை நிறுத்தாது செல்ல முற்பட்டபோதே துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது. இச்சம்பவத்தில் சிக்கி துன்னாலைப் பகுதியைச் சேர்ந்தவர்களான கே.சிவகுமார் (வயது24) மற்றும் ப. உதயகுமார் (வயது 21) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (27)

# கைதடிப் பகுதியில் ஏ – 9 வீதியில் வாகன விபத்தில் 2 பயணிகள் பலி

## 23 பேர் காயம்

ஏ.9 வீதியின் கைதடிப் பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்கி பொதுமக்கள் இருவர் பலியாகியுள்ளனர். அத்துடன் 23 பேர் காயமடைந்துள்ளனர். நேற்றுக் காலை 7.30 மணியளவில் சுன்னாகம் பகுதியிலிருந்து குறிப்பிட்ட தனியார் பேருந்து சாவகச்சேரி நகரப் பகுதியை நோக்கிப் பயணித்துள்ளது.அவ்வேளையில் அருகிலுள்ள வயற் காணியினுள் தடம்புரண்டு குறித்த பேருந்து வீழ்ந்துள்ளது. சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்திருந்த நிலையில், மற்றுமோர் நபர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட வேளையில் உயிரிழந்துள்ளார். ஆயினும், முதலில் கிடைத்த செய்திகளின் பிரகாரம் உயிரிழந்த இருவரது

(IVஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

14.06.1986ஆம் ஆண்டு நீர்வேலிப் பகுதியில் தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் நாட்டுப்பற்றாளர் ஒருவர் சாவடைந்துள்ளார். நாகமணி கைலாயநாதன் (3ஆம் வட்டாரம் முள்ளியவளை, முல்லைத்தீவு) என்ற நாட்டுப் பற்றாளரே சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

# சனாதிபதியின் அமைச்சுப் பறிப்புகளினால் போர் நிறுத்த விதிகள் முடங்குகின்றன!

## பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

சனாதிபதி மேற்கொண்ட அமைச்சுப் பொறுப்புக்கள் பறிப்பினால் போர் நிறுத்த உடன்படிக்கை விதிகள் முடக்கமடைகின்றன என ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டியுள்ளார். ஏற்கனவே மூன்று அமைச்சுக்கள் பறிப்பினால் போர் நிறுத்த உடன்பாட்டின் முதலாம் மூன்றாம் பிரிவுகள் முடக்க மடைந்தன. நேற்று முன்தினம் இடம்பெற்ற பறிப்பின் எதிரொலியாக இரண்டாம் பிரிவு முடக்கமடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

தனது ஆலோசனையைப் பெறாமல் பிரதி அமைச்சர்களையும், அமைச்சரவை அதிகாரம் அற்ற அமைச்சர்களையும் பதவி விலக்கியமை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சனாதிபதி சந்திரிகாவிற்கு தனது எதிர்ப்பை வெளியிட்டு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக, பிரதமர் கடிதம் ஒன்றை நேற்று சனாதிபதிக்கு அனுப்பியுள்ளார். இதில் கூறப்பட்டுள்ளதாவது; புனர்வாழ்வு, புனரமைப்பு அகதிகள் மீள்குடியமர்த்

(IVஆம் பக்கம் பார்க்க)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 31 | 14 |
| 05 | 01 |
| 1920 | 2004 |

### திருமதி. மேரி யோசப்பின் செல்லத்தம்பு

(காலஞ்சென்ற முன்னாள் முல்லைத்தீவு
பாராளுமன்ற உறுப்பினர் திரு. சே.மா. செல்லத்தம்பு
அவர்களின் பாரியார்)

பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே
மறக்க முடியாத உங்கள் பாசம்
நிழலாடும் உங்கள் நினைவு
உங்களைப் பிரிந்து தவிக்கின்றோம்
அன்பு காட்டி, கல்வி புகட்டி
எமையெல்லாம் ஆளாக்கி வைத்து
காலத்தின் கோலத்தால் சொந்த மண்ணைப் பிரிந்து
எதிர்பாராத நேரத்தில் எமை விட்டுப் பிரிந்து
மாதம் ஒன்று ஆகிவிட்டது
உங்கள் நினைவு எம்மை வாட்டுகிறது
என்றும் மறவாத உங்கள் நினைவுடன்.

13-02-2004அன்று அன்னாரின் 31ஆம் நாள் நினைவு அஞ்சலிப் பூசை சிட்னியில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்போம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு தொலைபேசி மூலமும், தொலைநகரி மூலமும், மின் அஞ்சல் மூலமும் அனுதாபச் செய்திகளை அனுப்பி வைத்தோர், ஆறுதல் கூறியோர் மற்றும் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தனை செய்தோர் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிள்ளைகள்-
மகேந்திரன், ராஜன், இந்திராணி.
மருமக்கள்-
மஞ்சுளா, லெஸ்லி ஜோர்ஜ், வசந்தி.
பேரப்பிள்ளைகள்-
நிரோசன், சந்திரன், ஜோ.ஆன்.

(அவுஸ்திரேலியா)
T.P. 0061297468942

(சி-9092)

## ஐசிங், கெயாஸ்ரைல், பூவேலை வகுப்புகள் ஆரம்பம்

மேற்படி எமது தொழிற்பயிற்சி நிறுவனத்தில் ஐசிங், கெயாஸ்ரைல், பூவேலை ஆகிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட வுள்ளதால் இதில் ஆர்வமுள்ளவர்கள் மேலதிக விபரங்களுக்கு 16.02.2004 ஆந் திகதிக்கு முன்பாக பெண்கள் தொழிற்பயிற்சி நிறுவன அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:- செல்வி.கு. எழில்
பெண்கள் தொழிற்பயிற்சி
நிறுவனத்தின்
இணைப்பாளர்.

(4236)

## 5ஆம் ஆண்டு நினைவலைகள்

08.02.2004



| ஈழமண்ணில் முத்தாக | ஈழமண்ணில் வித்தாக |
|---|---|
| 11 | 08 |
| 02 | 02 |
| 1973 | 1999 |

### மேஜர் மேனன்/நுபன்ராஜ்

(கந்தசாமி குணாளன்)
"குஞ்சரபவனம்"- கண்டாவளை.

இன்னுயிராம் உன்னுயிரை
பொன்னுயிராய் கருதாமல்
எம்மண்ணின் விடிவே - உன்
அரும்பணியாய் ஏற்று
காவியமான எம் கண்மணியே
காத்திருக்கின்றோம் - உன்
கனவு நிறைவேற கண்ணீர்
விழிகளுடன்.

இந்நாளில் இவருடன் காவியமான சக மாவீரர்களையும் எம் நெஞ்சில் நினைவு கூருகின்றோம்.

த. மு. கண்டிக்குளம் வீதி, தருமபுரம்.
பிரிவால் வாடும் உந்தன் குடும்பத்தினர்.

(4233)

## வரி விளம்பரம்

### ஆசிரியர் போட்டி வகுப்புக்கள் ஆரம்பம்

இடம் கிளி/ அக்கராயன் ம.வி. காலம் 14-02-2004 சனி, ஞாயிறு காலை 9.30 மணி. தொடர்பு: அதிபர் கிளி/ அக்கராயன் ம.வி. (4234)

### காணி விற்பனைக்கு

மல்லாவியில் புகழேந்தி நகரில் (1ஆம் யூனிற்) நமணன்குளத்தில் வீடு கிணற்றுடன் கூடிய 1 1/4 ஏக்கர் தென்னம் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு து. சிரேஸ்கரன் சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. T.P. 0602213215, T.P. 0712373352. (4235)

### தபால் மூல வாக்களிப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பிற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

இதன் அடிப்படையில் கிளிநொச்சி மாவட்ட தபால்மூல வாக்காளர்கள் யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அதிகாரிக்கு விண்ணப்பங்களை அனுப்பலாம் எனவும், முல்லைத்தீவு மாவட்ட தபால்மூல வாக்காளர்கள் வவுனியாவில் உள்ள தேர்தல் தெரிவு அத்தாட்சி அலுவலகத்திற்கு அனுப்பலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

### விளையாட்டுப் போட்டி

திருகோணமலை சென்.யோசப் கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி இன்று கல்லூரி மைதானத்தில் நடைபெறவிருக்கிறது.

கல்லூரி அதிபர் அருட் தந்தை ஜே.எஸ். ஜீவன்தாஸ் பெர்னாண்டோ தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், கல்லூரியின் பழைய மாணவரும் செலான் வங்கியின் பிரதித் தலைவருமான ராஜ்குமார் ரங்கநாதன் பங்குபற்றுகின்றார்.

சிறப்பு விருந்தினராக திருமலைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என். சந்திரகாந்தன் கலந்து கொள்கிறார்.

### புனரமைக்கப்பட்ட பணிமனை திறப்பு

முல்லைத்தீவு நகரில் புனரமைக்கப்பட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் பணிமனை வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணிமனை நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு வின்சன் றோய் ஜெப்றிட் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை தொழிநுட்ப உத்தியோகத்தர் திரு. தட்சணாமூர்த்தி ஏற்றி வைத்தார். கட்டிடத்தினை பிரதம பொறியியலாளர் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார். (20)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்



### லெப். கேணல் புவிதா

நடேசு நிர்மலாதேவி
பல்லவராயன் கட்டு ஜெயபுரம்

சம்பவம்: ஓயாத அலை - 03

| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 26-11-1968 | 13-02-2000 |

களங்கள் பல கண்டவளே - எங்கள்
மனங்களில் நிறைந்தவளே - உனது
அன்பும் அழகுருவும் இனி எங்கு காண்போமென
எங்கள் இதயங்கள் ஏங்கித் தவிக்குதம்மா
தலைவன் காட்டிய பாதையிலே
தமிழீழம் விடிகிறது. இன்று
மட்டுமல்ல இனி என்றுமே உந்தனது
நினைவுகள் எங்கள் நெஞ்சில் நிலைத்திருக்கும்.

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்

(4237)

## 31 ஆம் நாள் நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 24 | 16 |
| 08 | 01 |
| 1932 | 2004 |

### அமரர் வல்லிபுரம் மார்க்கண்டு

(முன்னாள் யாழ்ப்பாணம் CO-OP லொறி சாரதி)
நாயன் மார்கட்டு யாழ்ப்பாணம்

15.02.2004 ஞாயிற்றுக்கிழமை அன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

73, செம்மணி றோட்
நாயன் மார்கட்டு
யாழ்ப்பாணம்.

தகவல்:-
மா.கஜன் (மகன்)

(4227)

## கிளி/மாவட்ட தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்

### கணினி பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்வி நிறுவனத்தின் பிராந்திய நிலையங்களான பூநகரி, பளை ஆகிய நிலையங்களில் கணினி பயிற்சி நெறி ஆரம்பமாக உள்ளதால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

*கல்வித்தகைமை:- க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் ஆங்கிலம் அடங்கலாக 6 பாடங்களில் சித்தி. அத்துடன் க.பொ.த. உயர்தரம் சித்தி.

விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 29.02.2004ற்கு முன் எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது அந்தந்த பிரதேச செயலகங்களினூடாகவோ விண்ணப்பிக்கவும்.

அதிபர்,
கிளி/தொழில் நுட்பக் கல்வி
நிறுவனம், கிளிநொச்சி

(சி-8782)

# வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (நிகொட்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது.
கடன் இலக்கம் - 1846 - ஸ்ரீ [எஸ்.எப்]

*கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக மீளமைப்பு*
*அபிவிருத்தித்திட்டத்தைஅமுல்ப்படுத்துவதற்கு பங்குதாரரா வதற்கான*
*அரச சார்பற்ற நிறுவனங்களின்*

## (என்.ஜீ.ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு.

வடக்கு கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் இனமுரண்பாட்டினால் மக்களின் குறிப்பாக உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளான நிவாரணம், புனரமைப்பு வேலைகளுக்கு மேலும் வலுவூட்டி பங்களிப்புச் செய்வதே இத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வட கிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்கத்திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்டவெளிக்கள உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தி உபதிட்டங்கள் சமூகத்தை மையமாகக்கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்மிடுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்தவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல்நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆரம்ப கட்டமாக பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்கு தயார் படுத்துவதற்கும், வளங்களை ஒன்று படுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்குக் கிழக்கில் திட்டங்களை செயற்படுத்தும் தகுதி வாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடம் இருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| இல | மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| 01. | கிளிநொச்சி | கரைச்சி | விநாயகபுரம் |
| 02 | கிளிநொச்சி | கரைச்சி | எள்ளுக்காடு |
| 03 | கிளிநொச்சி | பூநகரி | இரணைமாதா நகர் |
| 04 | கிளிநொச்சி | கண்டாவளை | காஞ்சிபுரம் |
| 05 | கிளிநொச்சி | பச்சிலைப்பள்ளி | கோவில் வயல் |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இதுபற்றி மேலதிக விபரங்களை வேலை நாட்களில் காலை 9.30 மணிதொடக்கம் மாலை 3.30வரை கிளிநொச்சி மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபரிடம் இருந்து (தொலைபேசி 021-2283945, தொலைநகல் 021-2283965) பெற்றுக் கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்த விரும்பும் தகுதிவாய்ந்த அரசசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்டச் செயலாளருக்கு/ அரசாங்க அதிபருக்கு 05.03.2004 மாலை 3.00 மணிக்கு முன்பதாக தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் விருப்பத் தெரிவு வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விபரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01.விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவு செய்த விபரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக் காரியாலயம் முதலியன.

02.தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம் பெற்ற துறையும்.

03.வடக்கு கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக மீள்மைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.

04.விசேடமாக வடகிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறு குழுக்களை உருவாக்கல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.

05. வடக்கு கிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப் படுத்தும் வேலைத் தொகையும், கடந்த 05வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விபரங்களையும்.

06.இக் குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.

07.விருப்ப தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும், விண்ணப்பமும் அந்தரங்கமாக பேணிக்காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**தி.இராசநாயகம்,**
**மாவட்டச்செயலாளர்/ அரசாங்க அதிபர்**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-8776)

# தமிழீழ காவல்துறை சீர்திருத்தப்பிரிவை சர்.செஞ்சிலுவை பிரதிநிதிகள் பார்வையிட்டனர்

புதுக்குடியிருப்பு ஆனந்தபுரத்திலுள்ள தமிழீழ காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் நேற்று முன்தினமும் நேற்றும் சென்று பார்வையிட்டுள்ளனர்.



அங்கு அவர்கள் கைதிகளைத் தனித்தனியாகச் சந்தித்து கலந்துரையாடியதுடன் அவர்கள் தடுத்து வைக்கப்பட்ட இடங்களையும் பார்வையிட்டனர்.

பின்னர் இது தொடர்பாக காவல்துறையின் சீர்திருத்தப் பிரிவு பொறுப்பாளர் சொ.நரேன், ஆனந்தபுரம் சீர்திருத்தப்பிரிவு பொறுப்பதிகாரி பரிசோதகர் சசி, குற்றப் புலனாய்வு அதிகாரி உபபரிசோதகர் ஞானமுத்து ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில், புதுக்குடியிருப்பு வதிவிடப்பிரதிநிதி ஸ்ரவியர் கோப்போரியோ, மல்லாவி வதிவிடப்பிரதிநிதி பமிலா, கொழும்பு ஐ.சி.ஆர்.சி வெளிக்கள அலுவலர் டங்கன் ஆகியோர் இதில் பங்கேற்றனர். இவர்கள் சீர்திருத்தப்பள்ளியின் நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடினர்.

# ஐ.ம.சு.மு யின் இலட்சியங்கள் குறித்து அமெ.தூதுவருக்கு அநுரா விளக்கம்

(கொழும்பு)

சனாதிபதியின் ஆலோசகர் அநுரா பண்டாரநாயக்க அமெரிக்கத் தூதுவர் லெஸ்ரிலுஸ்ரேட்டை சந்தித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் இலட்சியங்கள் குறித்து விளக்கியுள்ளார்.

அநுரா பண்டாரநாயக்கவின் இல்லத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் கூட்டணியின் பொருளாதார சமூகக் கொள்கைகள் சம்பந்தமாக அமெரிக்கத் தூதுவருக்கு விளக்கிக் கூறியதாகவும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய வழிவகைகள் பற்றித் தெரிவித்தாகவும் குறிப்பிட்ள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகள் தொடர்ந்தும் வரவேற்கப்படும் என்றும் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.


## தமிழீழப் போக்குவரவுக்கழகம்

## நடத்துநர் பணிக்கான நேர்முகத்தேர்வு

தமிழீழப் போக்குவரவுக்கழகம் நடத்துநர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத் தேர்வு 15.02.2004 ஆம் நாள் ஞாயிறு காலை 09.30 மணிதொடக்கம் பகல் 02.00 மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர் கல்வித் தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகைதருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணியகம்,
விசுவமடு.

(சி-9091)



## தனியார் பேருந்து உரிமையாளர் கழகம் வன்னி

ஓட்டுநர் பணி செய்யும் ஓட்டுநர்கள்
தமிழீழ ஓட்டுநர் உரிமம் பெற்றுக் கொள்வதற்கான

## விண்ணப்பம் கோரல்

23அகவைக்கு மேற்பட்ட தமிழீழ ஓட்டுநர் உரிமம் பெறவுள்ள "ஓட்டுநர் பணி செய்யும் ஓட்டுநர்கள்" கீழே உள்ள விபரத்துடனான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

- முழுப் பெயர்:-
- நிலையான முகவரி:-
- தற்காலிக முகவரி:-
- குடும்ப அட்டை இலக்கம்:-
- அடையாள அட்டை இலக்கம்:-
- பிறந்த ஆண்டு, மாதம், திகதி:-

விண்ணப்ப முடிவு நாள்
29-02-2004

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

சு. மனோகரன்
(தலைவர்)
தனியார் பேருந்து உரிமையாளர் கழகம்,
வன்னி,
புதுக்குடியிருப்பு.

(4231)


## நடமாடும் சேவை

காலம் தாழ்த்திய பிறப்பு இறப்பு ஆகியவற்றைப் பதிவு செய்தல் நடவடிக்கைகள் இன்று மாந்தைகிழக்கு (பாண்டியன் குளம்) பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு-கிழக்கு உதவி பதிவாளர் நாயகம் அவர்கள் சமுகமளிக்கவுள்ள முல்லைத்தீவு மாவட்ட பதிவகத்தின் இவ் நடமாடும் சேவையில் கலந்து இதுவரை பிறப்பு இறப்பு பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் பயன் பெறுமாறு மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபரினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கிளி...

நோர்வே போன்ற நாடுகளின் கண்காணிப்புடன் இத்தொகுதிக்குள் வாக்களிப்பு நடத்துவதே சிறந்தது என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக புலிகளின் தலைமைப்பீடத்துடனும் ஆராயப்படவுள்ளதாக கூட்டணியின் முக்கிய பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (சோ)

### கைதடிப்...

சடலங்களும் அடையாளங் காணப்படவில்லையென தெரிய வருகின்றது.

இதேவேளை, சம்பவத்தில் சிக்கிக் காயமடைந்தவர்களில் சிலரது உடல்நிலை மிக மோசமான நிலையில் இருப்பதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (27)

### மக்களின்...

திட்டங்கள் கண்ணிவெடிஅகற்றுதல் போன்ற பல்வேறு பட்ட வேலைத் திட்டங்களை விரைவாக மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளும் பட்சத்தில் தான் மக்களின் சுமுகமான வாழ்க்கை உருவாகும் எனவும் நாம் அவர்களுக்கு தெரிவித்தோம். அதுமட்டுமன்றி தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைப் பயன்படுத்தி பாதிக்கப் பட்ட மக்களுக்கான வேலைத்திட்டங் களை சுவிஸ் அரசு மேற்கொள்ள வேண்டும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் பட்சத்தில் தான் சமாதானத்தின் பயன்களை மக்கள் அனுபவிக்கும் சூழ்நிலை உருவாகும். என்பதையும் அவர்களுக்கு தெளிவுபடுத்தினோம்.

அதுமட்டுமன்றி சுவிஸ் நாட்டு மக்களின் நிதி உதவியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடத்தும் முதியவர் பராமரிப்பு பெண்கள் பயிற்சி, கணினி பயிற்சி போன்ற வேலைத்திட்டங்கள் எவ்வாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்பது உள்ளிட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை கேட்டறிந்த சுவிஸ் அரச பிரதிநிதிகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் வேலைத்திட்டங்கள் பற்றி திருப்தி அடைந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (லோ)

# வடமராட்சியில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் பலி

வடமராட்சியின் கரையோரக்கிராமமான சுப்பர் மடம் பகுதியில் நேற்றிரவு மின்சாரம் தாக்கி இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் அதேபகுதியைச் சேர்ந்த விஜயகுமார் அசோக்குமார் (வயது 17) என அடையாளங் காணபட்டுள்ளார்.

வீட்டிற்கு மின் இணைப்பை பெற முயன்ற வேளையிலேயே இவர் மின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் பிரேத அறையில் நேற்று இரவு ஒப்படைக் கப்பட்டுள்ளது.(27)

## மருத்துவ உரிமத்திற்கு விண்ணப்பிக்க தவறியவர்கள் கவனத்திற்கு

வன்னிப்பெருநிலப்பரப்பில் உள்ள மருத்துவம் தொடர்பான நிலையங்களுக்கான மருத்துவ உரிமத்திற்கு விண்ணப்பிக்கும் கால எல்லை முடிவடைந்துள்ளதால் இதுவரை இதற்கு விண்ணப்பிக்காதவர்கள் 15.02.2004 - 15.03.2004 வரையான காலப்பகுதிக்குள் 35% மேலதிக அறவீட்டுடன் விண்ணப்பித்துக் கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

### சனாதிபதியின்...

தல் அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன, வன்னி புனர்வாழ்வமைச்சர் நூர்தீன் மசூர், இந்து கலாச்சார அமைச்சர் மகேஸ்வரன் ஆகியோர் விலக்கப்பட்டமையால் வட-கிழக்கில் இவர்கள் மேற்கொண்ட அனைத்து அவசர மனிதாபிமான சேவைகள் ஸ்தம்பித்துள்ளன. முன்னெடுக்கப்படுகின்ற. சமாதான முயற்சிகளுக்கு இது பாரிய தடைகளை ஏற்படுத்தும், இதேவேளை, போர் நிறுத்த உடன்படிக்கையின் இரண்டாவது பிரிவின் கீழ் இயல்பு நிலையை உறுதிப்படுத்தும் நோக்குடன் நம்பிக்கையை கட்டியெழுப்பும் நடவடிக்கையை மட்டுமே அரசாங்கத்தினால் மேற்கொள்ள முடியும்.

சனாதிபதி அமைச்சரவை மற்றும் அதிகாரமற்ற அமைச்சுக்களை பதவி விலக்கியமையின் எதிரொலியாக மிலிந்த மொறகொட தனது அமைச்சை இராஜினாமாச் செய்துள்ளார். இவர் வட-கிழக்கு பகுதிக்கு அமைக்கப்பட்ட ஆலோசனை குழுவிலும் அங்கம் வகித்தமையையும் பிரதமர் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்கமைய சனாதிபதியின் நடவடிக்கைகள் போர் நிறுத்த உடன்படிக்கையின் இரண்டாம் பிரிவு பொறுப்புக்களிலும் முடக்கத் தன்மையை ஏற்படுத்தியுள்ளன. ஏற்கனவே, அவர் மூன்று அமைச்சுக்களையும் பொறுப்பேற்றமையால் போர் நிறுத்த உடன்பாட்டின் முதலாம், மூன்றாம் பிரிவின் செயல்கள் செயலற்று போயின. எனவே சனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகள் சமாதான முனைப்புக்களை பாரியளவில் பாதித்துள்ளதாக பிரதமர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை உரிய முறையில் மிலிந்த மொறகொடவின் பதவி விலகல் சமர்ப்பிக்கப்பட்டால் அவரது பதவியை அமைச்சர் சொக்சிக்கு வழங்குமாறு சனாதிபதி ரணிலைப் பணித்துள்ளார்.

### சுவிஸ்...

அமைத்துக் கொடுப்பதற்கான முயற்சிகளை எவரும் மேற்கொள்ளவில்லை. அது மட்டுமன்றி கிளி. மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கு போதிய நிதி வழங்கப்படாத நிலையில் அவற்றை சீரான முறையில் மேற்கொள்ள முடியாதிருப்பதாகவும் மக்கள் எதிர் கொள்கின்ற முக்கிய பிரச்சினைகள் பற்றியும் மேற்படி குழுவினருக்கு எடுத்துச் கூறினார்.

இவற்றைக் கேட்டறிந்த சுவிஸ் அரச பிரதிநிதிகள் கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழக நடுவப் பணிமனைக்கு விஜயம் செய்து தமிழர் புனர்வாழ்வுக் கழக உதவி நிறைவேற்றுப் பணிப்பாளர் எஸ். இனியவன், புனர்வாழ்வுக்கழகத் திட்டப் பணிப்பாளர் லோறன்ஸ் கிறிஸ்ரி ஆகியோரைச் சந்தித்து புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டு வரும் அவசர மனிதாபிமானப் பணிகள் பற்றி கேட்டறிந்ததுடன் மேற்கொள்ளப்படாதிருக்கின்ற வேலைத் திட்டங்கள் பற்றியும் கேட்டறிந்தனர்.

அடுத்து தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்களைச் சந்தித்து சமகால அரசியல் நிலவரம் பற்றியும், அதில் விடுதலைப்புலிகளின் நிலைப்பாடு குறித்தும் கேட்டறிந்து கொண்டனர். தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்திற்குச் சென்று திட்டமிடல் செயலகப் பணிப்பாளர் தூயவன் அவர்களைச் சந்தித்து திட்டமிடல் செயலகத்தால் செயற்படுத்தப்படும் வேலைத திட்டங்கள் குறித்தும் அதன் நடவடிக்கைகள் என்பன பற்றியும் கலந்துரையாடினர்.

இறுதியாக தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி உள்ளிட்டோரைச் சந்தித்து வட-கிழக்கில் வாழ்கின்ற பெண்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் குறித்தும் பெண்கள் உபகுழுவின் செயல்பாடு குறித்தும் கேட்டறிந்து கொண்டனர்.

மேற்படி குழுவினருடன் கிறிஸ்தவ மதகுருமார் மூவரும் கலந்து கொண்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது. (லோ)

## சாவு அறிவித்தல்

### காசிப்பிள்ளை கார்த்திகேயன் (இரகுநாதன்)

நாயன்மார்கட்டைச் சேர்ந்த இந்துசாதன அச்சகத்தின் முன்னாள் ஊழியரான காசிப்பிள்ளை கார்த்திகேயன் (இரகுநாதன்) அவர்கள் 12.02.2004 அன்று காலமானார். அன்னார் இராசம்மா அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை பொன்னாச்சி அவர்களின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இலட்சுமிப்பிள்ளையின் பாசமிகு மருமகனும் யாழ்ப்பாணம் சிவனேஸ்வரி, காலஞ்சென்ற மகாதேவன், கேதீஸ்வரநாதன் (சுவிஸ்), பரமேஸ்வரி (நோர்வே) பரமேஸ்வரன் (ஜேர்மனி) தமிழ்ச்செல்வி (அவுஸ்திரேலியா) மங்களேஸ்வரி (ஜேர்மனி) மாவீரர் சின்ன நசீர் (சிவபரன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் புஸ்பதேவன், நளாயினி, திருச்செல்வம், வரதஇலட்சுமி, யோகானந்தம், உதயணன் ஆகியோரின் அன்பு மாமனாரும், தாரணி, நிரோஜினி, தாட்சாயினி, கஜனி, கஸ்தூரி, கபிலன், மீரா, தீபா, விதுஷன், ஜெயந்தன், தினேஸ், இரதினி, உஷாந்தன், மதுரன், பவித்தியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் விசுவமடுவிலுள்ள அன்னாரின் இல்லத்தில் 13.02.2004 (இன்று) மதியம் 1.00 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டுப் பின்னர் நாயன்மார்கட்டு இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்படும். அன்னாரின் தகனக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்

(3525)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு பெப்பவரி 13ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.